DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| STC. No. | 136/2023 |
| Defense: | எ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | பாலசுப்பிரமணியன் |
| **Father'/Husband's Name** | ~ | **கருப்பண்ணன்** |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt.23.01.2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது குரோம்பேட்டையில் வசித்து வருகிறேன். சொந்தமாக டூ வீலர் பார்க்கிங் வைத்து தொழில் செய்து வருகிறேன். வழக்கின் புகார்தாரர் வரதராஜ் என்பவரை 15 வருடமாக தெரியும் அவர் நான் நடத்தி வந்த பார்க்கிங்கில் சைக்கிள் நிறுத்தி பார்க்கிங் செய்து வந்தார். ஒருநாள் அவர் என்னிடம் வந்து தனக்கு தெரிந்த வங்கியில் இருந்து பணம் வாங்கி தருவதாக என்னிடம் சொன்னார். அதற்கு முன்பணமாக பத்தாயிரம் கொடுக்குமாறு சொன்னார். அந்த பத்தாயிரம் தொகைக்கு மாதம் 1300 ரூபாய் வட்டி செலுத்த வேண்டும் என சொல்லி என்னிடம் இருந்து 10 காசோலைகளை பெற்று சென்றார். அதன் பின்னிட்டு 20000 மற்றும் 50000 ஆகிய தொகைகள் பெற்று தருவதாக சொல்லி என்னிடமிருந்து மேலும் 10 காசோலைகளை பெற்றுக் கொண்டார் அவர் அந்த தொகையை எனக்குப் பெற்றுக் கொடுத்தார் கொரோனா காலத்தில் அந்த தொகையை என்னால் அவருக்கு திருப்பி செலுத்த முடியவில்லை. அந்த காசோலைகள் அனைத்தும் புகார் பொறுப்பில் தான் இருந்தது. அந்த காசோலையை தவறாக பயன்படுத்தி ரூ.மூன்றரை லட்சம் தொகை கொடுக்குமாறு கேட்டார். அதன் அடிப்படையில் இந்த வழக்கையும் தாக்கல் செய்துள்ளார்.

<u>புகார் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளீர்கள் என்றால் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். புகார்தாரருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம் அதில் விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். நான் புகார்தாரருக்கு கொடுத்த 17 காசோலைகளில் ஒரு காசோலைலும் கூட மேற்படி தொகை ரூபாய் 1300 க்கு ஒரு காசோலை கூட வழங்கப்படவில்லை என்றால் அதற்கு தொகை 1300 கொடுத்தால் அதில் ஒரு காசோலை என்னிடம் திருப்பி கொடுத்துவிடுவார் .மேற்படி புகார்தாரருக்கு கொடுத்த காசோலைகளில் எவ்வளவு காசோலைகளுக்கு தொகை கொடுத்து காசோலையை திரும்ப பெற்றுக் கொண்டீர் என்றால் பத்து காசோலைகளை திரும்ப பெற்றுக் கொண்டேன். ம.சா.ஆ. 1ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். என்னை ஐந்து நபர்கள் மிரட்டி கையொப்பம் பெற்றார்கள் அது தொடர்பாக காவல் நிலையம் சென்றீரா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் என்னை மிரட்டி கையொப்பம் செய்தார்கள் என்று நீதிமன்றத்தில் குறிப்பிட்டார் என்றால் இல்லை. இவ் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலையை நான் தான் எதிரிக்கு கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. நான் புகார்தாரரிடமிருந்து பெற்ற தொகை ரூபாய் 4,80650 தொகையில் ரூபாய்1,30,650 தொகையை புகார்தாரருக்கு 17 காசோலைகள் மூலம் திருப்பி செலுத்தி உள்ளேன் என்றால் நான் புகாரிடம் இருந்து மேற்படி 4,80,650 தொகை பெறவில்லை.1,30,650 தொகையை திருப்பி செலுத்தி விட்டேன் எவ்வளவு தொகை புகார்தாரிடம் இருந்து பெற்றீர்கள் என்றால் ரூ. 2,50,000 லிருந்து ரூ. 3,00,000 வரை பெற்றுள்ளேன். நான் புகார்தாரருக்கு கொடுத்த காசோலை எண்கள் எனது வங்கி பரிவர்த்தனையில் பதிவாகி இருக்கும் என்றால் சரிதான்.புகார் மனுவில் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பண பரிவர்த்தனைகள் எனது வங்கி கணக்கு பரிவர்த்தனைகளுடன் ஒன்றாக இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரருக்கு கொடுத்த காசோலையானது எனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என திரும்பி வந்துவிட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.மேற்படி காசோலை திரும்ப வந்தது தொடர்பாக காசோலை தொகையை புகார்தாரருக்கு திருப்பி செலுத்த நடவடிக்கை எடுத்தீரா என்றால் இல்லை. நான் புகார்தாரரிடம் இருந்து அந்த தொகையை வாங்கவில்லை அதனால் அதனை திருப்பி செலுத்தவில்லை.

3. என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். நான் புகார்தாரருக்கு தொகை ரூபாய் 3,50,000 நிரப்பி காசோலை கொடுக்கவில்லை தொகை நிரப்பாமல் தான் காசோலை கொடுத்தேன்.நான் புகார்தாரருக்கு தொகை ஏதும் நிரப்பாமல் தான் அனைத்து காசோலைகளையும் கொடுத்தேன். புகார்தாரர் எந்த வங்கியில் இருந்து பணம் பெற்று தருவதாக என்னிடம் சொன்னார் என்றால் ஏபிசி பைனான்ஸ் கம்பெனியிலிருந்து கடன் பெற்று தருவதாக சொன்னார். நான் புகார்தாரருக்கு எழுதி கொடுத்த உறுதிமொழி கடிதத்தை பின்பற்றவில்லை என்றால் சரிதான். அந்த உறுதிமொழி கடிதத்தில் புகார்தாரருக்கு நான் கடன் தொகை திருப்பி செலுத்தாத பட்சத்தில் நான் நடத்தி வரும் சைக்கிள் ஸ்டாண்ட் பார்க்கிங் இடத்தை அவருக்கு கொடுக்க வேண்டும் என எழுதப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆவணத்தில் எனது சுயநினைவுடன் எழுதிக் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் புகார்தாரரிடம் இருந்து ரூபாய் 4,80,650 தொகையை கடனாக பெற்றுக் கொண்டு அதில் 1,30,650 தொகையை திருப்பி செலுத்திவிட்டு மீத தொகையான ரூபாய் 3,50,000 –திற்கு எனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற விபரம் தெரிந்திருந்தும் புகார்தாரரை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக வழக்கு காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளேன் என்றால் இல்லை.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.